**18.2.2015**

# தினமணி

## இன்றைய வேளாண் செய்திகள்

### பவானிசாகர் அணையின் நீர்மட்டம் 71.89 அடி

பவானிசாகர் அணையின் நீர்மட்டம் செவ்வாய்க்கிழமை நிலவரப்படி 71.89 அடியாக இருந்தது. அணையின் அதிகபட்ச நீர்த்தேக்க உயரம் 105 அடி. அணைக்கு விநாடிக்கு 764 கன அடி நீர் வந்தது. அணையில் இருந்து ஆற்றில் 1,100 கன அடி நீர் திறந்துவிடப்பட்டது. வாய்க்காலில் பாசனத்துக்காக தண்ணீர் திறக்கப்படவில்லை. அணையில் நீர்இருப்பு 11.7 டி.எம்.சி.

### விவசாயிகள் நேரடி நெல் கொள்முதல் மூலம் பயன்பெற ஆட்சியர் அழைப்பு

பெரம்பலூர் மாவட்டத்தில் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் மூலம் பயன்பெற நெல் சாகுபடியாளர்களுக்கு அழைப்பு விடுத்துள்ளார் மாவட்ட ஆட்சியர் தரேஸ் அஹமது. இதுகுறித்து அவர் செவ்வாய்க்கிழமை வெளியிட்ட செய்திக்குறிப்பு: மாவட்டத்தில் 2014 - 15 ஆம் ஆண்டில் குன்னம், வேப்பந்தட்டை, அரும்பாவூர், இனாம் அகரம் ஆகிய 4 இடங்களில் ஜன. 28ஆம் தேதி முதல் நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் செயல்பட்டு வருகின்றன. இதன்மூலம், இதுவரை 84 மெட்ரிக் டன் நெல் கொள்முதல் செய்யப்பட்டு, இதுவரை ரூ. 12.5 லட்சம் வழங்கப் பட்டுள்ளது. இந்த நிலையங்களில் மின்னணு எடை தராசு மூலம் சரியான எடை கணக்கிட்டு, முழுமையான விலையை பெற்றுக் கொள்ள முடியும். கிரேடு ஏ ரக நெல் குவிண்டாலுக்கு ரூ. 1,470ம், பொது ரக நெல் குவிண்டாலுக்கு ரூ. 1,410ம் வழங்கப்பட்டு வருகிறது. மேலும், விற்பனை செய்த

நெல்லுக்கு உரிய தொகை உடனே பட்டுவாடா செய்யப்படுகிறது. எனவே, விவசாயிகள் அறுவடை செய்த நெல்லை மேற்கண்ட நேரடி நெல் கொள்முதல் நிலையங்களில் விற்பனை செய்து பயன் அடையலாம்.

தினமலர்

**இன்றைய வேளாண் செய்திகள்**

**<u>சிவகங்கையில் மணக்கும் "சம்பங்கி பூ'</u>**



வானம் பார்த்த பூமி சிவகங்கை. இம் மாவட்ட நிலத்தில் பூக்கள் விளைவது விவசாயிகளுக்கு அரிய விஷயம். ஆனாலும் சிவகங்கை கவுரிபட்டி விவசாயி எஸ்.மோகன், தனது நிலத்தை பண்படுத்தி நவீன சொட்டுநீர் பாசன கருவி மூலம் நீர் பாய்ச்சி, "சம்பங்கி பூ' சாகுபடி செய்து சாதித்து வருகிறார். விவசாயி மோகன் கூறியதாவது: சேலத்தை சேர்ந்த நாங்கள் குடும்பத்துடன் விவசாயம் செய்ய 23 ஆண்டுகளுக்கு முன் இங்கு வந்தோம். கவுரிபட்டியில் வாங்கிய நிலத்தை பண்படுத்தி, 3 ஏக்கரில் சம்பங்கி பூச்செடி நடவு செய்தோம். சேலம், ஜெயங்கொண்டானில் நாட்டு, ஒட்டு ரக(பிரிஜ்வார்)சம்பங்கி விதைகளை (கிழங்கு வகை) வாங்கி நடவு செய்தேன். 6 மாதங்கள் பராமரித்த பின் பூக்கள் பூக்க துவங்கும். பூச்செடிகளுக்கு தண்ணீர் சிக்கனத்திற்காக "பட்டர்பிளை' சொட்டு நீர் பாசன கருவி பொருத்தியுள்ளேன். பூச்செடி நடவிற்கு உரம், இயற்கை உரம், சொட்டு நீர் கருவி பொருத்துதல் போன்றவற்றிற்கு ஏக்கருக்கு ரூ.70 ஆயிரம் வரை செலவாகிறது. நாள் ஒன்றுக்கு 30 முதல் 40 கிலோ வரை சம்பங்கி பூக்கள் விளையும். இவற்றை மதுரை மார்க்கெட்டில்

விற்று வருகிறோம். பூக்களை மொட்டுகளாக மட்டுமே பறிக்க வேண்டும். மதுரை மார்க்கெட்டில் தற்போது சம்பங்கி பூ கிலோவிற்கு ரூ.40 மட்டுமே கிடைக்கிறது. முகூர்த்த காலங்களில் கிலோ ரூ.150 முதல் 200 வரை விற்றால் தான், விவசாயிகளுக்கு நல்ல லாபம் கிடைக்கும்.சம்பங்கி பூக்கள் குறைந்த விலைக்கு விற்பதால் ஆண்டுக்கு ரூ.1.08 லட்சம் வரை வருவாய் கிடைக்கும். செடிகள், ஆட்கள் கூலி, பராமரிப்பு செலவு போக குறைந்த வருவாயே கிடைக்கும். முகூர்த்த காலங்களில் நல்ல விலை போனால் லாபம் கிடைக்கும், என்றார். ஆலோசனைக்கு 99766 50101.

**-என்.வெங்கடேசன், சிவகங்கை.**

## சின்ன சின்ன செய்திகள்



இஞ்சி, மஞ்சள்: குழிகளில் சேமித்து வைத்துள்ள விதைக் கிழங்குகளை 20 நாட்களுக்கு ஒருமுறை கண்காணித்து வதங்கிய மற்றும் நோய் தாக்கிய கிழங்குகளை அகற்றி விட வேண்டும். மிளகாய்: கரிசல் மண் பிரதேசங் களில் 20-25 நாட்களுக்கு ஒருமுறையும் செம்மண் பிரதேசங் களில் 10-15 நாட்களுக்கு ஒருமுறையும் நீர் பாய்ச்ச வேண்டும். காய்ப்புழுக்களைக் கட்டுப்படுத்த என்.பி.வி. கரைசலை ஒரு ஏக்கருக்கு 200 லிட்டர் தண்ணீரில் தெளிக்க வேண்டும். காய்ப்புழுக்களின் அந்துப்பூச்சியின் நடமாட்டத்தைக் கண்காணிக்க அமைத்துள்ள இனக்கவர்ச்சிப் பொறி யின் இனக்கவர்ச்சி வேதிப்பொருளை மாற்ற வேண்டும். கருகல் மற்றும் பழ அழுகல் நோயைக் கட்டுப்படுத்த ஒரு லிட்டர் தண்ணீருக்கு கேப்டான் 1.5 கிராம் அல்லது காப்பர் ஆக்சி குளோரைடு 3 கிராம் அல்லது மான்கோசெப் 2.5 கிராம் என்ற அளவில் கலந்து தெளிக்க வேண்டும். அறுவடையைத் தொடங்கலாம். பறித்த மிளகாய் பழங்களை காலநிலை யைப் பொறுத்து 10-15 நாட்கள் சூரியஒளியில் உலர வைக்க வேண்டும். முடிந்த வரைக்கு மிளகாய் உலர்த்தும் இயந்திரம் அல்லது சூரியசக்தி பாலிதீன் உலர் அறைகளால் பயன்படுத்தலாம். உலர்ந்த மிளகாயின்

ஈரப்பதம் 8-10 சதத்திற்குள் இருக்குமாறு கவனித்துக் கொள்ள வேண்டும். பவர் ஜிம்: கிரீன்ஹவுஸ் ஆர்கானிக்ஸ் வழங்கும் வளர்ச்சி ஊக்கி திரவம்/குருனைகள் எல்லா பயிர்களுக்கும் ஏற்ற ஒரு இடுபொருள். விவசாயி கருப்பணன் (து/பெ.வேடிச்சி, புளிக்கரை போஸ்ட், பாலக்கோடு தாலுகா, தருமபுரி மாவட்டம். மொபைல் : 85089 14595) அவரது சம்பங்கிக்கு பவர் ஜிம்மைப் பயன்படுத்தியதில் பூ பெரியதாகவும் நிறைய அளவு வந்ததாகவும் தெரிவித்துள்ளார். பவர்ஜிம் விலை ரூ.640 / லிட்டர். மேலும் விவரங்களுக்கு அஞ்சன், மொபைல்: 96555 55166, ஜெகன் 98652 04567. எம்.டி.யு. 6 ரக நெல்: இது ஒரு புது வரவு. மகசூல் எக்டருக்கு 6118 கிலோ. வயது 110-115 நாட்கள். குறுகிய கால ரகம். இறவையில் எக்டருக்கு ஏ.டீ.டி.43 ரகத்தை விட 9.8 சதவீதமும், ஏ.டீ.டி. (ஆர்) 45 ரகத்தை விட 10.2 சதவீதமும் அதிக மகசூல் கொடுக்கக் கூடியது. ஈரோடு மாவட்டம், அய்யம்பாளையம் கிராமத்தில் சோதனை யின் போது அதிகபட்சமாக ஒரு எக்டரில் 9338 கிலோ நெல் மகசூல் தந்துள்ளது. நீண்ட சன்ன ரக அரிசியைக் கொண்டுள்ள இந்த ரகம் சிறந்த சமையல் பண்புகளை கொண்டுள்ளது. பச்சரிசியாக பயன்படுத்து வதற்கும் பொங்கல், அவல் போன்றவற்றைத் தயாரிப்பதற்கும் ஏற்றது. இலை சுருட்டுப்புழு, தண்டு துளைப்பான், பச்சை தத்துப்பூச்சி வெண் முதுகுப் பூச்சி ஆகியவற்றின் தாக்குதல்களை மிதமான அளவுகளில் தாங்கி வளரக்கூடியது. சொர்னவாரி, கார், குறுவை, நவரை ஆகிய பட்டங்களிலும், குறுகிய கால ரகங்கள் சாகுபடி செய்யும் பகுதிகளிலும் பயிரிட ஏற்ற ரகம். மேலும் விவரங்களுக்கு பேராசிரியர் மற்றும் தலைவர், பயிர் மரபியல் மற்றும் இனப்பெருக்கம் துறை, வேளாண்மைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், மதுரை-625 105. போன் : 0452 - 242 2956. கேழ்வரகை 2015 மார்ச்சில் விற்கலாம் : வேளாண் சந்தை பொருளியல் ஆய்வுகளின் அடிப்படையில் கேழ்வரகின் பண்ணை விலை டிசம்பர் 2014 முதல் பிப்ரவரி 2015 வரை கிலோ ஒன்றிற்கு ரூ.15 முதல் 16 வரை

இருக்கும் எனக் கணக்கிடப்பட்டுள்ளது. ஏப்ரல் மாதத்திற்கு பிறகு சிறிதளவு விலை ஏறுவதற்கான வாய்ப்புகள் காணப்படுகின்றன. எனவே உழவர்கள் அறுவடை செய்த கேழ்வரகை சேமித்து வைத்து பிப்ரவரி - மார்ச் 2015 மாதங்களில் விற்பனை செய்யுமாறு பரிந்துரைக்கப்படுகிறது. தமிழ்நாட்டில் மொத்த கேழ்வரகு உற்பத்தி தேவைக்கும் குறைவாக உள்ளதால் கர்நாடக மாநிலத்திலிருந்தும் வரத்துக்கள் கொள்முதல் செய்யப்படுகின்றன. தகவல் : முனைவர் ந.அஜ்ஜன், மு.ராஜ்குமார், வேளாண் மற்றும் ஊரக மேம்பாடு ஆய்வு மையம், த.வே.ப.கழகம், கோவை-641 003.போன்:0422 -243 1405. டாக்டர் கு.சௌந்தர பாண்டியன்.

**காய்கறி சாகுபடியில் விவசாயி அனுபவம்**



நான் தேனி மாவட்டம், போடிநாயக்கனூர் தாலுகா, பெருமாள் கவுண்டன்பட்டி என்னும் ஒரு சிறு கிராமத்தைச் சேர்ந்த ஒரு விவசாயி. நான் என்னுடைய மாட்டுக் கொட்டகையில் பந்தல் அமைத்து ஆடிப் பெருக்கு அன்று இரண்டு நாட்டுச்சுரை விதைகளை ஒரு சிமென்ட் தொட்டியில் நடவு செய்து கவனமாக வளர்த்து வந்தேன். அந்த இரண்டு செடிகளுக்கும் மண்ணை மலடாக்கும் ரசாயன உரங்களை கொடுக்காமல் மண்ணை வளமாக்கும் ஜீவாமிர்தத்தையே உரமாகக் கொடுத்து வந்தேன். நான் கொடுத்த அந்த உரத்திற்கு பரிசாக அந்த இரண்டு சுரைச்செடிகளும் இரண்டரை அடி நீளத்தில் 19 காய்கள் காய்த்தன. அந்த சமயத்தில் என்னுடைய இரண்டு கோழிகள் குஞ்சு பொரித்ததில் எட்டு முட்டைகள் குழு முட்டை (கெட்டுப்போனது) ஆகிவிட்டன. அதில் இரண்டு முட்டை களை செடிக்கு ஒன்று வீதம் வேரின் பக்கவாட்டில் சிறு குழி எடுத்து குழியில் முட்டைகளைப் போட்டு உடைத்து விட்டு மண்ணால் மூடி நீர் ஊற்றி பராமரித்து வந்தேன். இப்பொழுதான் ஒரு ஆச்சரியம்

காத்திருந்தது. ஐந்து நாள் கழித்து மாடியில் ஏறிநின்று கொடிகளை கவனித்தேன். வயதான அந்த கொடிகளில் சுமார் 50 பூக்களுக்கு மேல் பூத்திருந்தன. அந்த 50 பூக்களில் 18 பூக்கள் காயாக மாறி ஒரு வாரத்திற்குள் அசுர வேகத்தில் பெரிதாகி பறிப்புக்கு வந்தன. மீண்டும் ஆறுநாள் கழித்து முன்னைப் போலவே செடிக்கு ஒரு முட்டை வீதம் உரமாகக் கொடுத்தேன். மீண்டும் கொடிகளில் 55 பூக்கள் பூத்தன. அதில் 20 பூக்கள் காயாக மாறி 9 நாட்களில் பறிப்புக்கு வந்தன. மீண்டும் ஒரு வாரம் கழித்து செடிக்கு இரண்டு முட்டைகள் வீதம் உரமாகக் கொடுத்தேன். இப்பொழுது 70 பூக்களுக்கு மேல் பூத்தன. அதில் 24 பூக்கள் காயாக மாறி என்னை வியப்பில் ஆழ்த்தியது. மீண்டும் அதே முயற்சி, ஆனால் அந்த செடிகளுக்கு நித்திரை வந்து விட்டுது போலும், சித்திரை முடிய செடிகளும் நித்திரையில் ஆழ்ந்து விட்டன. அந்த இரண்டு சுரைச்செடிகளின் வாரிசுகளும் இந்த வருட ஆடியில் முளைத்து வளமாக வளர்ந்து வருகின்றன. அந்த இரண்டு சுரைச்செடிகளுக்கும் நான் கொடுத்த உரமோ 8 கெட்டுப்போன முட்டைகள். ஆனால் அந்த இரண்டு சுரைச்செடிகளும் எனக்குக் கொடுத்த வரவோ 81 சுரைக்காய்கள். இந்த சிறு முயற்சியின் மூலம் நாம் உணர்வது என்னவென்றால் காய்கறி மற்றும் எல்லாப் பயிர்களுக்கும் கெட்டுப்போன முட்டைகள், ஒரு சிறந்த உரம் என்பதை உணர்கிறோம். எனவே கோழி வளர்க்கும் விவசாயிகள் கெட்டுப்போன முட்டைகளை வீசி எறிந்து விடாமல் நம்முடைய பயிர்களுக்கே உரமாகக் கொடுக்க வேண்டும். **- ஆர்.ரத்தினம், போடிநாயக்கனூர் தாலுகா, தேனி மாவட்டம். 94424 94427**

**<u>நாளை விவசாயிகள் குறைதீர் கூட்டம்</u>**

காஞ்சிபுரம்: காஞ்சிபுரம் மாவட்ட விவசாயிகள் குறைதீர் கூட்டம், 19ம் தேதிக்கு மாற்றப்பட்டுள்ளது என, மாவட்ட ஆட்சியர் தெரிவித்து உள்ளார். இது தொடர்பாக, மாவட்ட ஆட்சியர் சண்முகம் வெளி யிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது: வரும், 20ம் தேதி நடைபெறுவதாக அறிவிக்கப்பட்டிருந்த, காஞ்சிபுரம் மாவட்ட

விவசாயிகளுக்கான குறைதீர் கூட்டம், நிர்வாக காரணங்களால், ஒரு நாள் முன்னதாகவே, வரும் 19ம் தேதி, நாளை காலை, 11:00 மணிக்கு, ஆட்சியர் அலுவலக வளாகத்தில் உள்ள, ஊரக வளர்ச்சி முகமை கூட்டரங்கில், மாவட்ட ஆட்சியர் தலைமையில் நடைபெற உள்ளது. இக்கூட்டத்தில், காஞ்சிபுரம் மாவட்டத்தைச் சேர்ந்த விவசாயிகள் கலந்து கொண்டு, முக்கிய வேளாண் துறை மற்றும் சார்பு துறைகள் தொடர்பான கோரிக்கை மனுக்களை அளிக்கலாம். இவ்வாறு செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**<u>திருச்சி மாவட்டத்தில் கூடுதலாக18 நெல் கொள்முதல் நிலையம் திறப்பு</u>**

திருச்சி:திருச்சி மாவட்டத்தில், ஏற்கனவே, 15 நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் செயல்பட்டு வரும் நிலையில், கூடுதலாக, 18 நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் திறக்கப்பட்டு உள்ளதாக, கலெக்டர் பழனிச்சாமி தெரிவித்தார்.இதுகுறித்து கலெக்டர் பழனிச்சாமி வெளியிட்ட அறிக்கை:திருச்சி மாவட்டத்தில், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிப கழகத்தின் மூலம், சம்பா சாகுபடியை முன்னிட்டு, கடந்த 9 ம் தேதி முதல், தொட்டியம், காட்டுப்புத்தூர், பெட்டவாய்த்தலை, குழுமணி, நவலூர் கொட்டப்பட்டு, முத்தரநல்லூர், நகர், பூவாளூர், லால்குடி, அன்பில், வெள்ளனூர், புஞ்சை செங்கேந்தி, பெருவளநல்லூர், குணசீலம், முசிறி ஆகிய இடங்களில், நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் திறக்கப்பட்டு, விவசாயிகளிடம் நெல் கொள்முதல் செய்யப்பட்டு வருகிறது.இந்நிலையில் நெல் அறுவடை முடிந்து, வரத்து அதிகரித்து உள்ளதால், கூடுதலாக லால்குடி வட்டத்தில் புள்ளம்பாடி, செம்பரை, வெங்கடாசலபும், விரகலூர், ஆலம்பாடி மேட்டூர், கோவண்டாகுறிச்சி, கல்விகுடி, ஆலம்பாக்கம், நத்தமாங்குடி, திண்ணியம், கோமாகுடி, முள்ளால், அரியூர், திண்ணக்குளம், நத்தம், காட்டூ, வெங்கடாசலபுரம் 2 மற்றும் மூன்று ஆகிய, 18 இடங்களில் நேரடி நெல் கொள்முதல்

நிலையங்கள், நாளை, 19ம் தேதி முதல் திறக்கப்பட்டு, நெல் கொள்முதல் செய்யப்படும். மேலும், சன்னரகம் குவிண்டால் ஒன்றுக்கு, 1,410 ரூபாய் மற்றும் ஊக்கத்தொகை, 60 ரூபாய் உடன் சேர்த்து, 1,470 ரூபாய் வழங்கப்படும். பொது ரகம் குவிண்டால் ஒன்றுக்கு, 1,360 ரூபாய் மற்றும் ஊத்கத்தொகை, 50 ரூபாய் உடன் சேர்த்து, 1,410 ரூபாய் வழ்ஙகப்படும். கொள்முதலுக்கான தொகையை விவசாயிகள், அவர்களின் விருப்பத்திற் கேற்ப ரொக்கமாகவோ, அல்லது வங்கி கணக்கில் இ.சி.எஸ்., மூலமாகவோ வழங்கப்படும்.இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

## கோழிக்கொண்டை கிலோ ரூ.20க்கு விற்பனை

தாடிக்கொம்பு : கோழிக்கொண்டை பூவிற்கு போதிய விலை கிடைக் காததால் விவசாயிகள் விரக்தியடைந்துள்ளனர். தாடிக்கொம்பு சுற்றுப்பகுதிகளான உண்டார்பட்டி, மறவபட்டி, பிறகரை உள்ளிட்ட கிராம விவசாயிகள் கோழிக்கொண்டை "பூ' சாகுபடி செய்துள்ளனர். கடந்த ஒரு மாதமாக கிலோ ரூ.10 முதல் ரூ.20 வரை விற்பனையாகிறது. கடந்த ஆண்டில் இதே மாதத்தில் கிலோவிற்கு ரூ.75 வரை விற்றது. வறட்சியால் தண்ணீர் பற்றாக்குறை இருந்த போதிலும், போர்வெல் அமைத்து தண்ணீர் பாய்ச்சி வருவதால் செலவினம் அதிகரித்துள்ளது. இந்நிலையில் போதிய விலை கிடைக்காததால் பூச்செடியை அழித்துவிட்டு வேறு பயிர் செய்யலாமா என்ற யோசனையில் விவசாயிகள் உள்ளனர். மறவபட்டி விவசாயி ஆரோக்கியதாஸ் கூறியதாவது,"இரண்டு ஆண்டுகளாகவே வறட்சியால் விவசாயம் பாதிக்கப்பட்டது. இந்த ஆண்டு பெய்த குறைந்த அளவு மழையை பயன்படுத்தி பூ விவசாயம் செய்துள்ளோம். குறைந்தபட்சம் கிலோவிற்கு ரூ.50 விலை கிடைத்தால்தான் கட்டுபடியாகும்' என கூறினார்.

## உளுந்து சாகுபடியில் அதிக மகசூல் வானூர் விவசாயி விருதுக்கு தேர்வு

வானூர்: உளுந்து சாகுபடியில் தேசிய அளவில் அதிக மகசூல் எடுத்த கொந்தமூர் கிராம விவசாயி தேசிய விருதுக்கு தேர்வு செய்யப் பட்டுள்ளார். வானூர் ஒன்றியம் கொந்தமூர் கிராமத்தை சேர்ந்த வேலு மனைவி விசாலாட்சி. இவர் உளுந்து சாகுபடியில் தேசிய அளவில் அதிக மகசூல் எடுத்துள்ளார். மத்திய அரசின் கிருஷிகர்மான் விருதுக்கு தேர்வு செய்யப்பட்டுள்ள இவர் வரும் 19ம் தேதி ராஜஸ்தான் மாநிலத்தில் நடக்கும் பரிசளிப்பு விழாவில் பிரதமரிடம் பரிசு பெற உள்ளார். திருச்சிற்றம் பலம் பி.டி.ஓ., அலுவலகத்தில் நடந்த வழியனுப்பு விழாவிற்கு நிலவள வங்கி தலைவர் பக்தவச்சலம் தலைமை தாங்கினார். வேளாண்மை உதவி இயக்குனர் துரைசாமி வரவேற்றார். ஆத்மா திட்ட தலைவர் ஏழுமலை, மாவட்ட கவுன்சிலர் ஜெய் சங்கர், ஊராட்சி தலைவர் விஜயலட்சுமி அறிவழகன் முன்னிலை வகித்தனர். வேளாண்மை உதவி இயக்குனர் துரைசாமி, விருதுக்கு தேர்வு செய்யப்பட்டுள்ள விவசாயி, உளுந்து சாகுபடியில் மேற்கொண்ட தொழிற்நுட்பம் மற்றும் மகசூல் குறித்து விளக்கினார். வேளாண்மை அலுவலர்கள் ஆரோக்கியராஜ், சுரேஷ், உதவி வேளாண்மை அலுவலர்கள் சக்திவேல், ராஜ் குமார், தங்கவேல், ரேக்கா, ராஜேஸ்வரி மற்றும் ஆத்மா தொழிற்நுட்ப மேலாளர் நரசிம்மராஜ், உதவி தொழிற்நுட்ப அலுவலர்கள் சந்திரசேகர், வீரமணி ஆகியோர் ஏற்பாடுகளை செய்திருந்தனர்.

## விவசாயிகள் குறைதீர் கூட்டம்

தேனி : தேனி மாவட்ட விவசாயிகள் குறைதீர்க்கும் கூட்டம் கலெக்டர் அலுவலகத்தில் பிப்.,20 காலை 11 மணிக்கு நடக்கிறது. கலெக்டர் வெங்கடாசலம் தலைமையில் நடை பெறும் கூட்டத்தில் விவசாயிகள் பங்கேற்று தங்கள் குறைகளை தெரிவித்து பயன்பெறலாம் என

கலெக்டரின் நேர் முக உதவியாளர் (வேளாண்மை) ரெங்க நாதன் தெரிவித்துள்ளார்.

**<u>ஒரு டன் ரூ.7,000 :விவசாயிகள் மகிழ்ச்சிமரவள்ளி கிழங்கு விலை கிடுகிடு உயர்வு</u>**

நாமக்கல்:சிவராத்திரி மற்றும் ராமநவமியை முன்னிட்டு, மரவள்ளி கிழங்கு விலை கிடுகிடுவென உயர்ந்து, தற்போது, டன் ஒன்று, 7,000 ரூபாய்க்கு விற்பனையாகிறது. இதனால், விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். தமிழகத்தில், நாமக்கல், சேலம், தர்மபுரி, ஈரோடு, பெரம்பலூர், விருதுநகர், கரூர், திருச்சி, தேனி, கன்னியாகுமாரி, தஞ்சை, கடலூர், வேலூர் உள்ளிட்ட பகுதிகளில், மரவள்ளிக்கிழங்கு அதிகளவில் சாகுபடி செய்யப்படுகிறது. இங்கு விளைவிக்கப்படும் மரவள்ளிக் கிழங்கு, அறுவடை செய்து, ஜவ்வரிசி ஆலைகளுக்கு அனுப்பி வைக்கப்படுகிறது. அதற்காக, நாமக்கல், சேலம், தர்மபுரி, விழுப்புரம், பெரம்பலூர், திருச்சி, ஈரோடு ஆகிய மாவட்டங்களில், சேகோ, ஸ்டார்ச் ஆலைகள் அதிகளவில் செயல்படுகிறது. குறிப்பாக, நாமக்கல், சேலம் மாவட்டங்களில் ஏராள மான சேகோ, ஸ்டார்ச் ஆலைகள் இயங்கி வருகிறது. இந்த ஆலைகளில், உற்பத்தி செய்யப்படும் ஜவ்வரிசி மற்றும் கிழங்கு மாவு வடமாநிலங் களுக்கு அனுப்பி வைக்கப்படுகிறது. அதன் மூலம் சேமியா, சிப்ஸ் உள்ளிட்ட, 64 வகையான உணவு பொருட்கள் தயார் செய்யப்பட்டு விற்பனை செய்யப்படுகிறது. அவற்றை பெருமளவில்வாங்கி உட்கொள்கின்றனர். ஆண்டு தோறும் சிவராத்திரி மற்றும் வடமாநிலங் களில் கொண்டாடப்படும் ராமநவமியை முன்னிட்டு, விரதம் மேற் கொள்ளும் பக்தர்கள், உணவாக ஜவ்வரிசியை அதிகளவு பயன்படுத்துகின்றனர். அதனால், அந்த சீஸனில் மரவள்ளி கிழங்கின் தேவை அதிகரிக்கும். ஜவ்வரிசியில் ரசாயனம் கலந்து, ஜவ்வரிசி உற்பத்தி செய்வதற்கு ஆலை நிர்வாகிகள் முக்கியத்துவம் அளித்து வருவதால், மரவள்ளிக்கிழங்கு விலை, சில வாரங்களாக குறைந்து

வந்தது. அதனால், கடந்த ஆண்டு, ஒரு டன் மரவள்ளிக் கிழங்கு, 12 ஆயிரம் ரூபாய்க்கு விற்பனை செய்யப்பட்டது.ஆனால், நடப்பு ஆண்டில், ஒரு டன் கிழங்கு, 4,000 ரூபாய்க்கு விற்பனையானது. இது விவசாயிகளுக்கு கடும் அதிர்ச்சியை ஏற்படுத்தியது. இந்நிலையில், 15 நாட்களில் அறுவடை சீஸன் முடிகிறது. அதனால், மரவள்ளி கிழங்கும் தேவை அதிகரித்துள்ளது. அதன் காரணமாக, சில நாட்களாக மரவள்ளி கிழங்கின் விலை கிடுகிடுவென உயர்ந்து, ஒரு டன் குறைந்த பட்சம், 6,500 ரூபாய், அதிக பட்சம், 7,000 ரூபாய்க்கும் விற்பனை செய்யப் படுகிறது. கிழங்கு சீஸன் முடியும் தருவாயில், ஜவ்வரிசி ஆலைகளுக்கு போதிய அளவு கிழங்கு கிடைக்கவில்லை. அதனால், இருக்கின்ற குறைந்த கிழங்கையும், ஆலை உரிமையாளர்கள் போட்டி போட்டு வாங்குவதால், கிழங்கின் விலை உயர்ந்து வருகிறது. இது பயிரிட்ட விவசாயிகளை மகிழ்ச்சி அடையச் செய்துள்ளது.

## ரூ. 1.25 கோடிக்குமஞ்சள் வர்த்தகம்

ராசிபுரம்:நாமகிரிப்பேட்டை, வேளாண் கூட்டுறவு விற்பனை சங்கத்தில், நேற்று, ஒரு கோடியே, 25 லட்சம் ரூபாய்க்கு மஞ்சள் ஏலம் நடந்தது. தமிழகத்தில், ஈரோட்டுக்கு அடுத்ததாக நாமகிரிப்பேட்டையில் மஞ்சள் மண்டிகள் அதிகம் உள்ளது. ஒவ்வொரு வாரமும், செவ்வாய்கிழமை, நாமகிரிப்பேட்டை வேளாண் உற்பத்தியாளர் கூட்டுறவு சங்க வளாகத்தில் ஏலம் நடக்கும்.நேற்று, நடந்த ஏலத்தில், 65 கிலோ கொண்ட, 2,205 மூட்டைகள் விற்பனைக்கு வந்தது. விரலி ரகம், குவிண்டாலுக்கு அதிக பட்சம், 9,799க்கும், குறைந்த பட்சம், 7,899 ரூபாய்க்கு ஏலம் போனது. உருண்டை ரகம் மஞ்சள், அதிக பட்சம், மூட்டை 8,789க்கும், குறைந்த பட்சம், 6,889 ரூபாய்க்கும் ஏலம்போனது.அதேபோல், பனங்காலி ரகம், அதிக பட்சம், 16 ஆயிரத்து, 669க்கும், குறைந்த பட்சம், 14 ஆயிரத்து, 371 ரூபாய்க்கும் ஏலம் போனது. மொத்தமாக, நேற்று

மட்டும், ஒரே நாளில், ஒரு கோடியே, 25 லட்சம் ரூபாய்க்கு மஞ்சள் விற்பனையானது.

தினகரன்

## இன்றைய வேளாண் செய்திகள்

### கோதுமை கொள்முதலுக்கு இலக்கு நிர்ணயம்



புதுடெல்லி: கோதுமை கொள்முதலுக்கு மத்திய அரசு 30.05 மில்லியன் டன் இலக்கு நிர்ணயம் செய்துள்ளது. மாநில உணவு துறை செயலாளர் கள் கூட்டம் புதுடெல்லியில் நடந்தது. உணவு அமைச்சக செயலாளர் தலைமையில் நடந்த இந்த கூட்டத்தில் 2015-2016 சந்தை ஆண்டில் ஏப்ரல் முதல் மார்ச் வரையிலான காலக்கட்டத்தில் கோதுமை கொள்முதல் செய்வது குறித்து ஆலோசனை நடத்தப்பட்டது. இதில் கோதுமை கொள்முதலுக்கு 30.05 மில்லியன் டன் இலக்கு நிர்ணயிக்கப்பட்டது. இதில் அதிகபட்சமாக பஞ்சாப் 12 மில்லியன் டன், அரியானா 7 மில்லியன் டன், மத்திய பிரதேசம் 6 மில்லியன் டன், உத்தர பிரதேசம் 3 மில்லியன் டன், ராஜஸ்தான் 1.8 மில்லியன் டன் இலக்கு வைக்கப்பட்டது. கடந்த ஆண்டு இலக்கு 28 மில்லியன் டன்னாக இருந்தது. இதுபோல் அரிசி கொள்முதலுக்கு 35.10 மில்லியன் டன் நிர்ணயிக்கப்பட்டது. இதில் தமிழகம் 1 மில்லியன் டன் என நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

### ஏனாத்தூர் உழவர் பயிற்சி மையத்தில் நாட்டுக்கோழி வளர்ப்பு பயிற்சி

காஞ்சிபுரம், : காஞ்சிபுரம் ஏனாத்தூரில் உள்ள உழவர் பயிற்சி மையத்தில் நாட்டுக்கோழி வளர்ப்பு பற்றி ஒரு நாள் பயிற்சி முகாம் நடந்தது. உழவர் பயிற்சி மையத்தின் தலைவர் வெங்கட சுதாகர்ராவ் தலைமை வகித்து

பயிற்சியளித்தார். அவர் பேசுகையில், 'கோழி வளர்ப்பு லாபகரமான தொழிலாகும். முட்டை ஊட்டச்சத்து மிக்கதாகும். கோழிக்கறிக்கும், முட்டைக்கும் தேவை அதிகரித்துள்ளதால் நாட்டு கோழி வளர்ப்பில் லாபம் கிடைக்கிறது. இத்தொழில் இளைஞர்களுக்கும், விவசாயி களுக்கும் வேலைவாய்ப்பு ஏற்படுத்தி தருகிறது. கோழிகளை முறையாக பராமரித்து சரிவிகித உணவு அளித் தால் அதிகளவில் லாபம் ஈட்டலாம்' என்றார்.இதில், விவசாயிகள் கலந்து கொண்டனர்.

## ரூ18.83 லட்சத்தில் விவசாயிகளுக்கு வேளாண் கருவிகள்

காஞ்சிபுரம், : ரூ18.83 லட்சம் மதிப்பீட்டில் விவசாயிகளுக்கு வேளாண் கருவிகளை எம்எல்ஏ வழங்கினார். காஞ்சிபுரம் கோட்டம் வேளாண் பொறியியல்துறை சார்பில், விவசாயிகளுக்கு மானியத்துடன் வேளாண் கருவிகள் வழங்கும் நிகழ்ச்சி நேற்று நடந்தது. கலெக்டர் சண்முகம் தலைமை வகித்தார். காஞ்சிபுரம் எம்எல்ஏ சோமசுந்தரம் கலந்து கொண்டு 14 விவசாயிகளுக்கு மானியத்தில் ழீ18.83 லட்சம் மதிப்பிலான வேளாண் கருவிகளை வழங்கினார். இதில், ஊராட்சி தலைவர் பன்னீர்செல்வம், ஒன்றியக்குழு தலைவர் தும்பவனம் ஜீவானந்தம், வேளாண்துறை செயற்பொறியாளர் சுப்பிரமணியம் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

## காடையாம்பட்டி வேளாண் துறை சார்பில் விவசாயிகளுக்கு விதை உற்பத்தி பயிற்சி முகாம்

ஓமலூர், : சேலம் மாவட்டம் ஓமலூரை அடுத்த காடையாம்பட்டி வட்டார வேளாண்மைத்துறை சார்பாக விவசாயிகளுக்கு விதை கிராமத் திட்டத்தின் கீழ், விதை உற்பத்தி குறித்த பயிற்சி முகாம் நடந்தது. குண்டுக்கல் மற்றும் சின்னதிருப்பதி ஆகிய கிராமங்களில் இந்த பயிற்சி முகாம் நடைபெற்றது. பயிற்சிக்கு வேளாண்மை உதவி இயக்குநர் நாசர் தலைமை வகித்து, விதை உற்பத்தியில் உயிர் திரவ உரங்களான பாஸ்போ பாக்டீரியா, அசோஸ் பைரில்லம் பயன்பாடு பற்றி விளக்கி

கூறினார். வேளாண்மை அலுவலர் சம்பத்குமார், வேளாண்மைத் துறையில் உள்ள மானிய திட்டங்கள் பற்றியும், துணை வேளாண்மை அலுவலர் இரவிக்குமார் நல் விதை தேர்வு, விதை நேர்த்தி, சாகுபடி தொழில்நுட்பங்கள் பற்றியும் விளக்கி கூறினர். வட்டார தொழில்நுட்ப மேலாளர் ராஜேந்திரன் பண்ணை மேலாண்மை திட்டத்தில் தொழில்நுட்ப குறுஞ்செய்தி அனுப்புதல் பற்றி விவசாயிகளுக்கு எடுத்துறைத்தார். முன்னதாக உதவி வேளாண்மை அலுவலர் தண்டபாணி அனைவரையும் வரவேற்றார். இப்பயிற்சியில் 100 விவசாயிகள் கலந்து கொண்டனர். பயிற்சியின்போது, திரவ உயிர் உரமான அசோஸ் பைரில்லம் கொண்டு விதை நேர்த்தி செயல்விளக்கம் செய்து காண்பிக்கப்பட்டது. உதவி வேளாண்மை அலுவலர் நடராஜன் நன்றி கூறினார். உதவி வேளாண்மை அலுவலர்கள் ஞானஜோதிமுருகன், முத்துசாமி, ராமு மற்றும் அட்மா திட்ட பணியாளர்கள் சிவக்குமார், பழனியப்பன் ஆகியோர் இதில் கலந்து கொண்டனர்.

## ஆவின் மாட்டுத்தீவன மூட்டைக்கு ரூ.500 வீதம் மானியம் தரவேண்டும்

ஈரோடு, : பாரதிய ஜனதா கட்சியின் விவசாய அணி மாவட்ட நிர்வாகிகள் கூட்டம் நடந்தது. கூட்டத்திற்கு விவசாய அணி தலைவர் கலைசெல் வன் தலைமை வகித்தார். மாவட்ட பொதுசெயலாளர் திருமலைசாமி உட்பட பலர் கலந்து கொண்டனர். கூட்டத்தில்ல, கீழ்பவானி பாசன பகுதிகளில் முறையான நீர்நிர்வாகம் செய்யாததால் இரண்டாம் போக நெல் சாகுபடியின் போது சுமர் 20 ஆயிரம் ஏக்கர் பாசன நிலங்களில் நெல் பயிரிடப்படாமல் தரிசாக போடப்பட்டுள்ளது. மேலும் வேளாண் துறையினர் தரமற்ற விதைகளை விற்பனை செய்பவர்களை கண்டு கொள்ளாததால் சுமார் 25 ஆயிரம் ஏக்கரில் பயிரிட்ட நெற்பயிரில் பூஞ்சானம், புகையான் நோயால் பாதிக்கப்பட்டு பெருந்த நஷ்டத்திற்கு விவசாயிகள் ஆளாகியுள்ளனர். கிராமப்புறங்களில்

இருந்து விவசாயிகள் கொண்டு வரும் காய்கறிகளை விற்பனை செய்வதற்கு ஈரோடு புறநகர் பகுதிகளில் அனைத்து வசதிகளுடன் கூடிய தனி இடம் அமைத்து தர வேண்டும். மேலும் விவசாயிகளின் காய்கறி கொண்டு வரும் வாகனங்களுக்கு எவ்வித நுழைவு கட்டணமும் வசூலிக்க கூடாது. கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் சங்கங்களில் கொள்முதல் செய்யும் போது கொள்முதல் செய்யும் இடத்திலேயே எடை மற்றும் பொது டெஸ்ட் எடுத்து இதற்கான ரசீதை உடனடியாக பால கூட்டுறவு சங்க நிர்வாகிகளிடம் வழங்க வேண்டும். இதன் மூலம் ஆவின் பால் நிறுவனங்களில் நடைபெறும் முறைகேடுகளை தடுக்க முடியும். ஆவின் மாட்டு தீவனத்திற்கு மூட்டைக்கு ரூ.500 வீதம் மானியம் வழங்க வேண்டும். 2 ஆண்டுகளாக தொடர்ந்து உரத்தட்டுபாடு ஏற்பட்டு வருகிறது. இதை கண்டு கொள்ளாத மாநில அரசை வன்மையாக கண்டிக்கிறோம். என்பன உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

## <u>விவசாயத்தில் தொழில் நுட்பம் பயன்படுத்த வலியுறுத்தல்</u>

அரியலூர், : தா.பழூ£ வட்டார அட்மா திட்ட வட்டார விவசாயிகள் ஆலோசனைக் குழு கூட்டம் தா.பழூரில் உள்ள வேளாண்மை அலுவலகத்தில் நடைபெற்றது. ஒன்றியகுழுத் தலைவரும் அட்மா திட்ட விவசாயிகள் குழு தலைவருமான ஜெய்சுதா தலைமை வகித்து துவக்கி வைத்தார். தா.பழூர் வட்டார வேளாண்மை உதவி இயக்குனர் பழனிசாமி பேசியதாவது: அட்மா திட்டத்தில் செயல்படுத்தப்படும் திட்டங்களான அம்மா பண்ணை மகளிர் குழுவிற்கு செயல்விளக்க பயிற்சி மற்றும் திறன் வளர்க்கும் தொழில்நுட்பம் குறித்து வழங்கப்படும் பயிற்சியை விவசாயிகள் நன்கு பயன்படுத்திக் கொள்ளவேண்டும். மேலும் காரைக்குறிச்சி கிராமத்தில் கால்நடை பண்ணைப்பள்ளி நடத்த ஏதுவாக விவசாயிகள் தேர்வு நடைபெறும்போது விவசாயிகள் பயிற்சி பள்ளியில் கலந்து கொண்டு பயன்பெறும்படி உறுப்பினர்களை கேட்டுக் கொண்டார். நிகழ்ச்சியில், வேளாண்மை பொறியியல் துறையின்

இளநிலை பொறியாளார் கண்ணன், கால்நடை உதவி மருத்துவர் ஜெயந்தி, கிரீடு வேளாண் அறிவியல் மைய தொழில் நுட்ப வல்லுனர் உமாசந்திரா மற்றும் வேளாண்மை விற்பனை மற்றும் வணிகத் துறையை சார்ந்த குமாரபாண்டியன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். ஏற்பாடுகளை, வேளாண்மை அதிகாரி ரவிச்சந்திரன், உதவி வேளாண்மை அதிகாரி ஜோதி, அட்மா திட்ட உதவி தொழில் நுட்ப மேலாளர் குமணன் ஆகியோர் செய்து இருந்தனர்.

## <u>திருத்துறைப்பூண்டியில் பாரம்பரிய நெல் ரகங்களை அதிகாரி பார்வை</u>

திருத்துறைப்பூண்டி,: திருவாரூர் மாவட்டம், திருத்துறைப்பூண்டி அருகேயுள்ள ஆதிரெங்கம் இயற்கை வேளாண் மற்றும் ஆராய்ச்சி மையத்தில் பாதுகாத்து வைக்கப்பட்டுள்ள பாரம்பரிய நெல் ரகங்களை தமிழ்நாடு நுகர்பொருள் வாணிப கழக திருவாரூர் மண்டல மேலாளர் அழகிரிசாமி பார்வையிட்டார். பின்னர் அவர் கூறுகையில் இந்த பண்ணையில் பாரம்பரிய நெல் ரகங்களை பார்க்கும்போது 60 ஆண்டு காலத்திற்கு முன் சாகுபடி செய்யப்பட்ட நெல்ரகங்களை இங்கு பார்ப்பது மகிழ்ச்சி அளிக்கிறது. உழவர்கள் பாரம்பரிய நெல் ரகங்களை பாதுகாத்து அடுத்து வரும் தலைமுறையினருக்கு அளிக்கவேண்டும் என்றார். நமது நெல்லை காப்போம் மாநில ஒருங்கிணைப்பாளர் நெல் ஜெயராமன், கிரியேட் பயிற்சி ஒருங்கிணைப்பாளர் செந்தில்குமார் உள்ளிட்டோர் உடனிருந்தனர்.

## <u>ஊடுபயிராக சோளம் பயிரிடலாம்</u>

பழநி, : ஊடுபயிராக பயிரிடுவதற்கு சோளம் ஏற்றது என வேளாண் துறையினர் தெரிவித்துள்ளனர். சோளம் பயிரிட கோ.எஸ் 28, கோ (எஸ்) 30, வீரிய ஒட்டு சோளம் கோ 5 ஆகியவை ஏற்ற ரகங் களாகும். பயிர் அறுவடைக்கு பின்பு சட்டிக்கலப்பை கொண்டு ஆழமாக உழவு செய்ய வேண்டும். இறவை நிலத்திற்கு ஹெக்டேருக்கு 10 கிலோவும், மானாவாரி நிலத்திற்கு ஹெக்டேருக்கு 15 கிலோ விதைகள்

தேவைப்படும். 45*15 சென்டிமீட்டர் அல்லது 45*10 சென்டிமீட்டர் இடைவெளி இருக்க வேண்டும். விதைகளை 1 லிட்டர் தண்ணீரில் 20 கிராம் பொட்டாசியம் டை ஹைட்ரஜன் பாஸ்பேட் என்ற அளவில் 6 மணி நேரம் ஊற வைத்த பிறகு 5 மணி நேரம் நிழலில் உலர்த்த வேண்டும். 1 ஹெக்டேருக்கு 600 கிராம் அசோஸ்பைரில்லம் பயன்படுத்தி விதை நேர்த்தி செய்ய வேண்டும். விதைப்பு செய்த 3ம் நாளும், பின்னர் 10 நாட்களுக்கு ஒருமுறையும் நீர்ப்பாசனம் செய்ய வேண்டும். மக்கிய தொழு உரம், நுண்சத்து, மக்கிய தென்னைநார் கழிவுடன் அசோஸ்பைரில்லம், பாஸ்போ பேக்டீரியம், சாம்பல் சத்து, தழை மற்றும் மணிச்சத்து போன்றவற்றை வேளாண் அதிகாரிகளை ஆலோசித்து உர நிர்வாகம் மேற்கொள்ள வேண்டும். விதைத்த 30 நாட்களில் களை எடுக்க வேண்டும். சோளம் தனிப்பயிராக பயிரிடும் போது அட்ரசின் என்ற களைக்கொல்லியை தெளிக்க வேண்டும். சோளத்தை ஊடுபயிராக பயிரிடும்போது அலகுளோர் என்ற களைக்கொல்லி மருந்தை பயன்படுத்த வேண்டும். குருத்து ஈ, தண்டு துளைப்பான், கதிர்நாவாய், செம்பேன், துரு நோய், தேன் ஒழுகல் நோய், கதிர் பூசாண நோய், அடிச்சாம்பல் நோய் போன்றவை ஏற்பட்டால் வேளாண் துறை அதிகாரிகளை ஆலோசித்து உரிய மருந்துகளை தெளிக்க வேண்டும். கதிர்கள் நன்கு காய்ந்து முற்றிய பிறகு அறுவடை செய்ய வேண்டும். இது தொடர்பான கூடுதல் விபரங்களுக்கு வேளாண் உதவி இயக்குநர் அலுவலகத்தை அணுகலாம் என வேளாண்துறையினர் தெரிவித்துள்ளனர்.

## விவசாயிகள் குறைதீர் கூட்டம்

சிவகங்கை, : சிவகங்கையில் விவசாயிகள் குறைதீர் கூட்டம் பிப்.27ல் நடக்க உள்ளது. காலை 11 மணிக்கு சிவகங்கை கலெக்டர் அலுவலகத்தில் கலெக்டர் தலைமையில் நடைபெற உள்ள இக்கூட்டத்தில் வேளாண், தோட்டக்கலை, மின்வாரியம், குடிநீர்

உள்ளிட்ட பல்வேறு துறைகளை சேர்ந்த உயர் அலுவலர்கள் கலந்து கொள்ள உள்ளனர். இதில் மாவட்டம் முழுவதும் உள்ள விவசாயிகள் கலந்து கொண்டு விவசாயம் சார்ந்த தங்களது குறைகளை நேரில் தெரிவித்து, அவற்றை நிவர்த்தி செய்து கொள்ளலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது.

**இன்றைய வேளாண் செய்திகள்**

**2,205 மஞ்சள் மூட்டைகள் ரூ.1¼ கோடிக்கு ஏலம்**



நாமகிரிப்பேட்டையில், 2,205 மஞ்சள் மூட்டை கள் ரூ.1¼ கோடிக்கு ஏலம்போனது.

மஞ்சள்ஏலம்

நாமக்கல் மாவட்டம் ராசிபுரம் அருகே உள்ள நாமகிரிப்பேட்டை ஆர்.சி.எம்.எஸ். கிளை அலுவலக வளாகத் தில் ராசிபுரம் தாலுகா கூட்டுறவு உற்பத்தியாளர் மற்றும் விற்பனைச் சங்கம் சார்பில் மஞ்சள் ஏலம் செவ்வாய்க்கிழமை தோறும் நடந்து வருகிறது. வழக்கம் போல் நேற்றும் மஞ்சள் ஏலம் நடந்தது. இந்த ஏலத்தில் நாமகிரிப் பேட்டை, ஒடுவன்குறிச்சி, புதுப்பட்டி, பேளுக்குறிச்சி, அரியாக்கவுண்டம்பட்டி, ஆத்தூர், ஊனத்தூர் உள்பட பல இடங்களில் நூற்றுக்கும் மேற்பட்ட விவசாயிகள் மஞ்சளை ஏலத்தில் விற்பனை செய்வதற்கு கொண்டு வந்திருந்தனர். இதேபோல ஏலத்தில் சேலம், ஈரோடு, நாம கிரிப்பேட்டை, ஒடுவன்குறிச்சி உள்பட பல பகுதிகளைச் சேர்ந்த வியாபாரிகள் கலந்து கொண்டனர்.

ரூ.1¼கோடிக்குவிற்பனை

இந்த ஏலத்தில் விரலி ரகம் 1,360 மூட்டைகளும், உருண்டை ரகம் 830 மூட்டை களும், பனங்காளி ரகம் 15 மூட்டைகளும் கொண்டு வரப்பட்டு இருந்தன. இதில் விரலி ரகம் குறைந்தபட்சம் ஒரு குவிண்டால் ரூ.7,899-க் கும் அதிகபட்சமாக ரூ.9,799-க் கும், உருண்டை ரகம் குறைந்தபட்சம் ரூ.6,889-க்கும் அதிகபட்சமாக ரூ.8,789-க்கும், பனங்காளி ரகம் குறைந்த பட்சம் ஒரு குவிண்டால் ரூ.14,371-க்கும் அதிகபட்சமாக ரூ.16,669-க்கும் ஏலம் விடப்பட்டது. சென்ற வாரம் நடைபெற்ற ஏலத்தில் 1,865 மஞ்சள் மூட்டைகள் ரூ.90 லட்சத்திற்கு ஏலம் போனது. நேற்று நடைபெற்ற ஏலத்தில் 2,205 மஞ்சள் மூட்டைகள் ரூ.1¼ கோடிக்கு ஏலம் போனது. சென்ற வாரத்தை விட மஞ்சள் மூட்டைகள் வரத்தும் அதிகரித்து, ஏலமும் கூடுதல் தொகைக்கு போனதால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்து உள்ளனர்.

## <u>செட்டிகுளம் வெங்காய வணிக வளாகத்தில் சின்ன வெங்காயம் ரூ.2½ லட்சத்திற்கு ஏலம்</u>



செட்டிகுளம் வெங்காய வணிக வளாகத்தில் திறந்த முறை ஏலம் நடத்தப்பட்டது. இதில் சத்திரமனை, அம்மாபாளையம நக்கசேலம்¢ ,மாவிலங்கை, இரூர், செட்டிகுளம் , நாட்டார் மங்கலம்¢, கூத்தனூர், சீதேவிமங்கலம், பொம்மனப்பாடி ஆகிய கிராமங்களை சேர்ந்த 96 விவசாயிகள் தாங்கள் உற்பத்தி செய்த சின்ன வெங்காயத்தினை திறந்தமுறை ஏலத்திற்கு கொண்டு வந்து விற்பனை செய்தனர். திருச்சி, பாவூர்சத்திரம், பாண்டிச்சேரி, செட்டிகுளம், நாட்டார்மங்கலம், சத்திரமனை , பொம்மனப்பாடி, தேனூர், சீதேவிமங்கலம,¢ ஆலத்தூர்

ஆகிய பகுதிகளை சேர்ந்த 11 வியாபாரிகள் 352 மூட்டை (23,642 கிலோ) சின்ன வெங்காயத்தினை ஏலத்தில் எடுத்தனர். சின்ன வெங்காயம் அதிகபட்சம் கிலோ ரூ.15.50-க்கும் விதை வெங்காயம் அதிகபட்சமாக கிலோ ரூ.26-க்கும் சராசரியாக ஒரு கிலோ ரூ. 11-க்கும் விற்பனை யானது. இதன்மூலம் ரூ.2 லட்சத்து 51 ஆயிரத்து185-க்கு விற்பனை நடைபெற்றது. அனைத்து விவசாயிகளுக்கும் பணம் உடனடியாக வழங்கப்பட்டது.

<u>ராமேசுவரம் பகுதியில் குவிந்துள்ள தர்பூசணி</u>



ராமேசுவரம் பகுதியில் சீசனையொட்டி தர்பூசணி பழங்கள் விற்பனைக்காககுவிந்துள்ளது.

தர்பூசணிவிற்பனை

ராமநாதபுரம் மாவட்டத்தில் கடந்த 2 மாதமாக நிலவி வந்த பனியின் தாக்கம் குறைந்து தற்போது வெயிலின் ஆதிக்கம் மெல்ல மெல்ல தொடங்கி உள்ளது. ராமேசு வரம் தீவுக்கு உட்பட்ட தங்கச்சிமடம், பாம் பன் உள்ளிட்ட பகுதிகளில் வெயில் சீசன் தொடங்கியுள்ளது. தொடக்கத் திலேயே வெயிலின் தாக்கம் அதிகளவில் உள்ளது. குறிப்பாக மதிய வேளைகளில் சுட்டெரிக்கும் வெயில் கொளுத்துகிறது. இதனால் பொது மக்கள் குளிர்பானங்களையும், பழச்சாறுக ளையும் வாங்கி பருகி தாகத்தை தணித்துக் கொள்கின்றனர். இந்த நிலையில் குழந்தைகள் மற்றும் பெரி யவர்களுக்கு விருப்பமானதும், தண்ணீர் சத்து நிறைந்தது மான தர்பூசணி பழங்கள் வரத்து தொடங்கி உள்ளது. கோடை காலத்தை யொட்டி வெளிமாவட்டங்களில் இருந்து இந்த தர்பூசணி பழங்கள் இங்கு கொண்டு வரப்பட்டு விற்பனை செய்யப்படுவது வழக் கம். இதன்படி ராமேசுவரம் மற்றும் தங்கச்சி மடம் பகுதியில் ஆங்காங்கே தர்பூ சணி கடைகள் போடப்பட்டுள்ளது. இவ்வாறு இப்பகுதியில் மட்டும் சுமார்

4,500க்கும் அதி கமான தர்பூசணி பழங்கள் விற்பனைக்காக கொண்டு வரப்பட்டுள்ளன. ஒரு கிலோ தர் பூசணி பழம் ரூ.20க்கு விற்பனை செய்யப் படுகிறது.